# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE SUBORDINATE COURT, AVINASHI

# MCOP -53/2017

# PW – 2

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : துரைராஜ் | | : | |
| **Father Name** | : கண்ணுச்சாமி | | : | |
| **Village** | : | **Calling** | : | மருத்துவர் |
| **Taluk** | : | **Age** | : | /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of October 2024)**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு மூட்டு பிரிவில் துணை பேராசியராக உள்ளேன். இந்த நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் இன்று ஆஜராகி சாட்சியமளிக்கிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கின் மனுதாரர் சந்திரன் என்பவருக்கு ஏற்பட்ட காயங்களை ஆய்வு செய்து நிரந்தர ஊனச்சான்று வழங்க கேட்டு வந்த கடிதத்தின் பேரில் மனுதாரர் சந்திரனுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அவர் 12.10.2022 மற்றும் 26.10.2022 தேதிகளில் எங்களுடைய மருத்துவக்குழு முன்பு ஆஜரான நிலையில் அவருக்கு எக்ஸ்ரே மற்றும் பரிசோதனைகள் செய்யப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயங்களில் வலி மட்டும் இருப்பதாக உணரப்பட்டதின் பேரில் அந்த காயத்திற்கு 3% மட்டும் குறிப்பிட்டு ஊனச்சான்றிதழ் வழங்கப்பட்டது. அந்த ஊனச்சான்று

நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த நீ.ம.சா.ஆ.1 சான்றின் மனுதாரருக்கு என்ன காயம் United fracture intertrochanteric left femur with implant insitue காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த எலும்பு முறிவானது கூடி விட்ட நிலையில் (சரியான நிலையில்) சொல்லப்பட்டுள்ளது. அந்த காயமானது இடுப்பு எலும்புடன் இணையும் தொடை எலும்பின் பந்து முனைக்கு கீழ் பகுதியில் எலும்பு உடைந்திருந்து அது கூடிவிட்டது. அந்த எலும்பு உடைந்த பகுதியில் Dynamic hip screw பொருத்தப்பட்ட நிலையில் உள்ளது. அந்த மனுதாரருக்கு ஊனச்சான்று வழங்க வேண்டி எடுத்துக்கொண்ட பரிசோதனை விபரம் அடங்கிய பரிசோதனை சான்று நகல் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. நிரந்தர ஊனச்சான்றானது முறையாக மருத்துவ பரிசோதனை செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொடு உணர்வு வலி எதுவும் இல்லை என்றும், ஆனால் அவ்வப்போது வலிப்பதாக சொன்னதின் பேரில் அவருடைய காயத்திற்கு 3% ஊனச்சான்றிதழ் வழங்கப்பட்டது. அந்த 3% ஊனச்சான்றானது நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்று நீ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிடவில்லை.

**குறுக்கு விசாரணை : இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**